# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்.

**முன்னிலை: திரு.சு.அருண்சங்கர், பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC)**
**முதுகுளத்தூர்.**
**2022ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13ம் நாள் செவ்வாய்க்கிழமை.**

**IA No.186/2020**
**in**
**OS.No.18/2017**

1. பத்மினி.
2. விவேகானந்தன்,
3. பன்னீர்செல்வம்,
4. பொருட்செல்வி,
5. சௌந்திரம்(இறப்பு),
6. நாகராஜன்,
7. கோபாலகிருஷ்ணன்,
8. சடாச்சாரம்,
9. சைவத்துரை,
10. செல்வராணி,
11. காவேரிமணி

(As per Memo P5 Lrs of P6 to P10 allowed on 04.11.2020).

**......மனுதாரர்கள்/வாதிகள்**

**/எதிர் /**

1. அப்துல்லா அசன் சேட்
   (மேற்படியாரின் பவர் ஏஜெண்ட்
   ஜபருல்லாகான் மூலம்)
2. சுரேஷ்குமார்,
3. கார்த்திகேயன். **...... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்**

இந்த மனு கடந்த 01.12.2022 அன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள்/ தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.வேலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.சந்திரசேகரன், அவர்கள் ஆஜராகியும், அசல் வழக்கில் 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினராக உள்ள நிலையில், முன்னிட்ட வாதத்தின்

அடிப்படையிலும் மனு, எதிர் உரை மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**<u>உத்தரவு</u>**

**01.** இந்த மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதிகள் 17, 18 மற்றும் சிபிசி பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>02.மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்</u>**

இவ்வழக்கு நிலுவையில் இருந்து வரும் சமயத்தில் வாதிகளுக்கு பாத்திய, அனுபவப்பட்ட தாவா பாதையில் அனாவசியமான நபர்கள் இரவு நேரங்களில் சந்து பாதையில் நடந்து வீன் தொந்தரவுகள் ஏற்படுவதினால் பாதையில் 1ம் பிரதிவாதி/எதிர்மனுதாரர் இருக்கும் சமயத்தில், 1ம் பிரதிவாதிக்கு தெரிந்தே, வாதிகளால் கல் தூண்கள் ஊன்றப்பட்டது. இருப்பினும் கல் தூண்கள் இடைவெளியில் தான் வாதிகள் தங்களது வீடுகளுக்கு வடக்கு பாதையில் இருந்து தெற்கே செல்லும் தாவா சந்துப்பாதையில் தான் நாளதுதேதிவரை மனுதாரர்கள்/வாதிகளின் பாத்திய, அனுபவத்தில் இருந்து வருகிறது. இவ்வாறு உண்மை இருக்க வாதி தரப்பு 1வது சாட்சியை, 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது 1ம் பிரதிவாதி/எதிர்மனுதாரர் கல் தூன் ஊன்றப்பட்டதுபோல் கேள்வி கேட்டவுடன் அவரும் தனது வழக்கறிஞர் இல்லாத சமயத்தில் குறுக்கு விசாரணை செய்த காரணத்தினால் பதற்றத்துடன் ஏதோ உளரலாக வாதிகள், பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் யார் என்று தெரியாதநிலையில் 1ம் பிரதிவாதி/எதிர்மனுதாரர் ஊன்றியதாக கூறியுள்ளார். உண்மையில் அவ்வாறு இல்லை. அதனால் பின்னீடு வழக்கில் வீண் டெக்கனிக்கல்

எதிர்வாதங்களை தவிர்ப்பதற்காக மேற்படி கல்லை அப்புறப்படுத்துவதற்கு வாதிகள் தரப்பில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி இம்மனுவில் கண்டபடி பிராதில் திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகையால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து பிராதை திருத்துவதற்கு ஏதுவாக மனுவில் கண்டபடி திருத்தங்களை அங்கீகரித்துக்கொண்டு வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டி மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

## திருத்த வேண்டிய விபரங்கள்

1. Short cause title-ல் 5 ம் வாதிக்கு அடுத்து "இறப்பு " என்றும்,

As per amended petition in I.A.No.54/2021 is allowed on dated: 24.02.2021

2. As per memo P5 Lr of P6 to P10 is allowed on date: 04.11.2020.

As per amended petition in I.A.No.54/2021 is allowed in date: 24.02.2021

4. Long cause title-ல் 5 ம் வாதி முகவரிக்கு அடுத்து "இறப்பு " என்றும்,

As per amended petition in I.A.no.54/2021 is allowed on date: 24.02.2021

5. 10-ம் பிரதிவாதி முகவரிக்கு அடுத்து

As per memo P5 Lr of P6 to P10 is allowed on date: 04.11.2020 என்றும்,

3. பிராது 19 வது பாராவிற்கு அடுத்து 20 வது பாராவாக தாவா சொத்தில் கல் தூண்களை அகற்றுவதற்குரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு ரூ..1000/- என மதித்து தமிழ்நாடு நீதிமன்ற முத்திரை கட்டணச்சட்டம் 1955(திருத்தச்சட்டம் 2003) பிரிவு 27(c) -ன்படி மவுண்டு ரூ.30/- செலுத்தி வைக்கப்படுகிறது.

ஆக மொத்தம் ரூ.1506/- இத்துடன் செலுத்தி வைக்கப்படுகிறது.

4. பரிகாரத்தில் (Prayer) 1 வது பரிகாரத்திற்கு அடுத்து 2 வது பரிகாரமாக

தாவா சொத்தில் உள்ள கல் தூண்களை சமூகம் கோர்டின் மூலம் அகற்றத்தக்க வகையில் 1 ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை (Mandatory Injunction) பரிகாரம் வழங்கியும்,

5. தாவா பரிகாரங்களில் 2 என்பதை 3 ஆக திருத்தியும் 3 என்பதை 4 ஆக திருத்தியும் இவ்வாறாக பிராதில் திருத்திக்கொள்ளவேண்டியது.

**<u>03. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் எதிர் உரை சுருக்கம்</u>**

(i) மனுதாரர்கள்/வாதிகள் தங்களது மனுவில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவா பாதையில் அனாவசியமான நபர்கள் இரவு நேரங்களில் சந்து பாதையில் நடந்து வீண் தொந்தரவுகள் ஏற்படுவதினால் மேற்படி பாதையில் 1ம் பிரதிவாதிக்கு தெரிய வாதிகளால் கல் தூண்கள் ஊன்றப்பட்டதாகவும், அதற்காக வீன் டெக்கனிக்கல் எதிர்வாதங்களை தவிர்ப்பதற்காக மேற்படி கல்லை அப்புறப்படுத்துவதற்கு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி மனு செய்துள்ளதாக கூறுவது கடுமையாக மறுத்து ஆட்சேபணை செய்யப்படுகிறது. மனுதாரர்கள்/வாதிகள் கல் தூண் ஊன்றியதாக மனுவில் கூறிவிட்டு அதனை அகற்றுவதற்கு மனு செய்திருப்பது முன்னுக்கு பின் முரணாக உள்ளது. உண்மையில் எதிர்மனுதாரரின் எதிர்வழக்குரையிலேயே "தாவாச் சொத்து 1ம் பிரதிவாதி சொத்து என்பதால் வேறு நபர்கள் யாரும் தாவாச் சொத்தில் புழங்கக் கூடாது என்பதற்காக தாவாச் சொத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் 1ம் பிரதிவாதி கல் கால் ஊன்றியுள்ளார்". மேற்படி விபரங்கள் பிராதில் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தும் அதனை விடுத்து வழக்கு பின்பு ஏதோ கல்

ஊன்றப்பட்டதாகவும், அதற்கு பரிகாரம் வேண்டி மனு செய்திருப்பது சரியல்ல. மனுதாரர்கள் பொய்யான காரணங்களை சொல்லி மனு செய்திருப்பது சரியல்ல. மேற்படி மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்றாகும்.

(ii) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தனது எதிர்வழக்குரையிலேயே மேற்படி விபரத்தை தெரிவித்தும் அது பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விடுத்து வழக்கு விசாரணை பட்டியலில் எடுக்கப்பட்டு வாதிகள் தரப்பு விசாரணைகள் அனைத்தும் முடிந்தும், பிரதிவாதி தரப்பு விசாரணை சமயத்தில் மனுதாரர்கள்/வாதிகள் வேண்டுமென்றேதான் இந்த மனுவை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளார். காலதாமதத்திற்கான ஏற்றுக் கொள்ளத்தக்க காரணம் எதையும் மனுதாரர்கள்/வாதிகள் தனது மனுவில் கூறாததிலிருந்தே மனுதாரர்கள்/வாதிகள் பக்கம் நியாயமான காரணம் ஏதுமில்லை என்பதும் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலுமே இந்த மனுவைத் தாமதமாகத் தாக்கல் செய்துள்ளார் என்பதும் தெளிவாகிறது.

(iii) எதிர்மனுதாரர்களை/பிரதிவாதிகளை அழைக்கழிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிகிறது. மேற்படி மனுதாரர்கள்/வாதிகள் மனுச்செய்திருப்பது எந்த விதத்திலும் நியாயமானதல்ல, ஏற்றுக்கொள்ளக்கூடியதும் அல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

(iv) Each and every day of delay should be explained என்பது விதியாகும். ஆனால் மனுதாரர்கள்/வாதிகள் காலதாமதத்திற்குக் காரணம் எதுவும் குறிப்பிடவில்லை. சொல்லப்படும் காரணத்திற்கும் ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்த மனுவைத் தாக்கல் செய்திருப்பதில் மனுவை ஏற்றுக் கொள்வதற்கு எந்தவித –ம்

இல்லாத நிலையில் மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யத்தக்கதாகும். ஆகையால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து தள்ளுபடி செய்து உத்திரவிட வேண்டியும் ஒருக்கால் மனுதாரரின் மனுவை அனுமதிக்கும்பட்சம் இந்த எதிர்மனுதாரர்களின் அதிக பட்ச செலவு தொகையுடன் அனுமதித்து உத்திரவிட்டு நீதி வழங்கப் பணிவுடன் பிரார்த்திக்கப்படுகிறது.

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதை இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் ஆகும்.**

**04)**<u>**தீர்வு:**</u>

அசல் வழக்கில் தாவா சொத்து வாதிகள் மற்றும் 2 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரியும் அதன் தொடர்ச்சியாக 1ம் பிரதிவாதி எந்தவித தடையிடஞ்சலும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனுவில் சட்டப்பூர்வமான பின்தொடர்ச்சி திருத்தங்களை (Consequential amendment) திருத்த வேண்டிய விபரங்களை ஏற்கனவே நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து இருப்பதால், மேற்படி திருத்தங்கள் செய்வதற்கு எந்தவிதமான ஆட்சேபணை ஏதும் இல்லை என்பதாலும், மேற்படி திருத்தங்களை திருத்துவதற்கு அனுமதிப்பதே நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இம்மனுவானது பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும் தருணத்தில் 5ம் வாதி இறந்ததை பயன்படுத்தியும் திருத்தம் செய்வதற்கு ஏதுவாக இம்மனு தாக்கல் செய்யவேண்டியிருக்கும்போது அசல் வழக்கில் பரிகாரத்தில் கல் தூண்களை அகற்றக்கோரி திருத்தம் செய்வதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பது

ஏற்றுக்கொள்ளக்கூடியதா என்று இந்நீதிமன்றம் காணும்போது அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர் வழக்குரையிலும், எதிருரையிலும் பிரதிவாதியால் தாவா சொத்தில் கல் தூண்கள் உள்ளது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் அசல் வழக்கு தாவா சொத்தில் கல் தூண்களை பொறுத்து எந்தவிதமான உத்தரவும் இல்லாமல் இருப்பது மற்றொரு வழக்கிற்கு வழிகோலாய் அமையும் என்பதால் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்கும் பட்சத்தில் ஒரே வழக்கில் விளம்புகை பரிகாரத்தையும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தையும் தீர்மானிக்க ஏதுவாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

05) <u>முடிவாக</u>

முடிவாக வழக்கின் சூழ்நிலைகள் மற்றும் இம்மனுத்தாக்கல் செய்த காலகட்டத்தை கருத்தில் கொண்டு மனுதாரர்கள்/வாதிகள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு ரூ.1000/-த்தை 21.12.2022 ஆம் தேதித்குள் செலுத்த வேண்டுமென்றும், செலுத்த தவறும் பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடி செய்யப்படும் என்று உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் கணினி தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் கணினியில் வைத்தே பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2022ம் வருடம் டிசம்பர் மாதம் 13ம் தேதி செவ்வாய்க்கிழமை அவையறிய பகரப்பட்டது.

S ARUN SANKAR
Digitally signed by S ARUN SANKAR
Date: 2022.12.13 17:52:11 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
முதுகுளத்தூர்.

<u>பின் இணைப்புகள்</u>

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:–</u> இல்லை

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

05.11.2015 ம் தேதி பிரதிவாதி தாக்கல் செய்த கேவியட் மனு நகல் ம.சா.ஆ.1.

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u> இல்லை

S ARUN SANKAR
Digitally signed by S ARUN SANKAR
Date: 2022.12.13 17:52:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
முதுகுளத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

முதுகுளத்தூர்

இடைநிலை மனு எண்.186/2020
இன்
அசல் வழக்கு எண்.18/2017
சீரான உத்தரவு

நாள்: 13.12.2022.